IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE NO.I, HOSUR

**OS NO.111/2014**

Deposition DW 1 witness for Plaintiffs / Defendant / Respondent Solemnly affirmed and sworn by Thiru. S. Chandru Grade III Bench Clerk on 02.09.2024 accordance with the provisions with the Act of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.கெம்பன்னா | Father's Name : | திரு.திம்மராயப்பா |
| Village : | | Taluk : | |
| -- | | Calling : | |
| -- | | Age : | 71 |
| பி.வா.சா. : | 1 | | |

The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition.

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:

**12)** நாகொண்டப்பள்ளி கிராமத்தில் எனக்கு 2 வீடுகள் உரிமைப்பட்டுள்ளது. மேற்படி 2 வீடுகளுக்கும் மின் இணைப்பு பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வீடுகளுக்குரிய கதவு எண்.2/196 மற்றும் 2/197, அவற்றின் புல எண் முறையே 111 மற்றும் 883 ஆகும். மேற்படி புல எண்ணில் உள்ள சொத்துக்கள் குறிதிது மட்டுமே இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வீட்டு வரி ரசீதில் கதவு எண்.1/126 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வப்பபோது கதவு எண் மாற்றப்பட்டு வருகிறது. என்னிடம் காட்டப்படும் மற்றுறொரு வீட்டுவரி ரசீதுகளில் கதவு எண்கள். 1/127, 215, 197, 209, 217 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், பின்னிட்டு தான் மேற்படி கதவு எண்.2/196 மற்றும் 2/197 வழங்கப்பட்டது. மேற்படி வீட்டு வரி ரசீதுகள் எனது பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். ஆகவே எனக்கு நாகொண்டப்பள்ளி கிராமத்தில் 2

வீடுகள் மட்டுமே உரிமைப்பட்டுள்ளதாக பொய்யாக தெரிவித்துள்ளேன் என்றாலும், மேற்படி கதவு எண்களில் உள்ள அனைத்து வீடுகளும் எனக்கு உரிமைப்பபட்டது தான் என்றால் சரியல்ல.

13) வழக்கு பட்டிகை சொத்துகளுக்குரிய பட்டாவானது எனதுபெயரில் தவறுதலாக வழங்க்ப்பட்டது என்றாலும், ஆகவே தான் அதற்குரிய வீட்டு வரியை நான் செலுத்தி, மேற்படி வீட்டு வரி ரசீதுகள் பெற்றுள்ளேன் என்றாலும், மேலும் எனக்கும் மேற்படி வழக்கப்பட்டிகை சொத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி வீட்டு வரி ரசீதுகள் இவ்வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு தான் பெறப்பட்டுள்ளன என்றாலும், அதற்கு முந்தைய காலங்களுக்குரிய வழக்குப்பட்டிகை சொத்துகளுக்குரிய வருவாய் ஆவணங்கள் வாதிகள் பெயரில் தான் இருந்தது என்றால் சரியல்ல. எந்த எந்த வருடத்தில், எந்த எந்த கதவு எண்கள் முறையே வழக்குப்பட்டிகை வீட்டுக்கட்டிடங்களுக்கு வழங்கப்பட்டது என்று எனக்கு சரியாக தெரியாது. நாகொண்டப்பள்ளி கிராமத்திற்கு கிராம முன்சீப்பாக திரு.ஸ்ரீனிவாச ரெட்டி இருந்தார் என்றால் அதுகுறித்த எனக்கு தெரியாது. 1978-1979 கால கட்டங்களில் வழக்கு பட்டிகை வீட்டு கட்டிடங்களுக்குரிய வீட்டு வரி ரசீதுகளை திரு.குல்லப்பாபெயரில் வழங்கப்பட்டிருந்தது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது. மேலும் 1990-1991 மற்றும் 1992-1993 கால கட்டங்களில் வழக்கு பட்டிகை வீட்டு கட்டிடங்களுக்குரிய வீட்டு வரி ரசீதுகளை திரு.குல்லப்பாபெயரில் வழங்கப்பட்டிருந்தது என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது, மேற்படி ஆண்டுகளுக்குரிய வீட்டு வரியை நான் தான் செலுத்தியுள்ளேன்.

14) அப்போதைய கால கட்டத்தில் திரு.குல்லப்பா அவர்களுக்கு மேற்படி வீடுகள் மட்டுமே உரிமைப்பட்டிருந்த காரணத்தினால், அதுகுறித்து அவர்தான் வீட்டு வரி செலுத்தினார் என்றால் சரியல்ல. அதன்பின்னிட்டு 1ம் வாதி பெயரில் உள்ள வீடு ஆனது அரசால் 1994ம்ஆண்டு அவருக்கு வழங்கப்பட்டது என்றால் அதுகுறிதிது எனக்கு தெரியாது. மேற்படி அரசால் நிலம் வழங்கப்பட்ட விவரங்கள் எனக்கு தெரியாது. திரு.மரியப்பா அவரது மகன் திரு.ராஜப்பா என்பவரை எனக்கு தெரியும். அவர் தற்போது எங்கு உள்ளார் என்று எனக்கு தெரியாது. எனக்கும் வாதிகளுக்கும் இடையே பஞ்சாயத்து நடைபெற்றது என்றாலும், அதில் திரு.ராஜப்பா கலந்து கொண்டார் என்றாலும் சரியல்ல. 1958ம் ஆண்டு எனது தந்தைக்கும், திரு.குல்லப்பா உட்பட மொத்தம் 4 நபர்களுக்கு

இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டது என்றாலும், அதுகுறித்து பஞ்சாயத்து முச்சலிக்கா ஏற்படுத்தப்பட்டது என்றாலும், அதன் பின்னிட்டு 1991ம் ஆண்டு திரு.குல்லப்பா வாதிகள் பெயரில் பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் ஏற்படுத்தினால் என்றாலும், மேற்படி விவரங்கள் குறித்து மேற்படி பஞ்சயாத்தில் பேசப்பட்டது என்றாலும் சரியல்ல.

15) மேற்படி விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றாலும், 1958-ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பஞ்சாயத்து முச்சலிக்காவில் எனது தந்தை கையெழுத்து இட்டார் என்றாலும் சரியல்ல. மேற்படி பஞ்சாயத்து முச்சலிக்காவில் எனது தந்தை கையெழுத்து இடவில்லை என்று நிரூபிக்க நான் தயாராக உள்ளேன். திரு.குல்லப்பா 1997ம் ஆண்டு இறந்து விட்டார் என்றால் எந்த ஆண்டு இறந்தார் என்று எனக்கு தெரியாது, ஆனால் அவர் தற்போது உயிருடன் இல்லை. அவருடைய இறப்பிற்கு பிறகு அவருடைய பாக சொத்துக்கள் என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. திரு.குல்லப்பாவிற்கு பாகமாக வழங்ககப்பட்ட நிலத்திலிருந்து சுமார் 1 கிலோ மீட்டர்தொலைவில் எனது தந்தைக்கு பாகமாக வழங்ககப்ட்ட நிலம் உள்ளது. எனது தந்தைக்கு பாகமாக வழங்கப்பட்ட சொத்தை தான் நான் அனுபவத்து வருகிறேன். மேலும் திரு.குல்லப்பாவிற்கு பாகமாக வழங்கப்பட்ட சொத்துக்களில் தான் வாதிகள் சுவாதீண அனுபவத்தில் இருந்து வருகின்றனர் என்றால் சரிதான். திரு.குல்லப்பாவிற்கு பாகமாக வழங்கப்பட்ட சொத்து குறித்து தான் வாதிகள் பெயரில் பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றாலும், அதில் தான் அவர்கள் சுவாதீண அனுபவத்தில் இருந்து வருகின்றனர் என்றாலும் சரியல்ல.

16) தற்போது வழக்குப்பட்டிகை சொத்துகளுக்குரிய 2/197 ஆகும். இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.7 மற்றும் பி.வா.சா.ஆ.8 ஆவணங்களில் எனது விலாசமானது 2/197 எனறு குறிப்பிடவில்லை என்றால் சரிதான், பழைய கதவு எண்.217 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கதவு எண்.217 ல் உள்ள வீட்டிற்கும் வழக்குப்பட்டிகை சொத்துகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. மேலும் என்னிடம் காட்டப்படும்ம பி.வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆகிய மின்இணைப்பு அட்டை, மற்றும் மின் கட்டன ரசீதுகளுக்கும் வழக்குப்பட்டிகை சொத்துகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. வழக்குப்பட்டிகை வீடுகளில் வாதிகள் என்னை வசிக்க அனுமதித்தனர் என்றாலும்,

அதனைப்பயன்படுத்திக்கொண்டு பொய்யான விவரங்களைக்கூறி வழக்குப்பட்டிகை சொத்துகளுக்குரிய பட்டாவினை எனது பெயரில் பெயர் மாற்றம் செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. கடந்த 28.07.2014 தேதியன்று வாதிகள் எனக்கு வழக்கு அறிவிப்பு அனுப்பினர் என்றால் சரிதான். மேற்படி வழக்கு அறிவிப்பில் வாதிகளுக்கு எவ்வாறு வழக்குப்பட்டிகை சொத்துக்களை உரிமை மூலம் கிடைக்கப்பட்டது என்றும், மேலும் என்னை எனது பெயரில் வழங்கப்பட்ட பாட்டாவினை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டிருந்தனர் என்றால் நிலப்பிரிச்சினை குறித்து வாதிகள் எனக்கு அனுப்பிய அறிவிப்பை பெற்றேன்.

**17)** வழக்குப்பட்டிகை வீடுகளுக்க கடந்த 40 வருட்ங்களாக வீட்டு வரி செலுத்தி வருவதாக நான் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான், அதை காண்பிப்பதற்குரிய சில ரசீதுகளை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன், மீத ரசீதுகள் தொலைந்து விட்டன. வாதி கோரியுள்ள பரிகாரங்கள் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றாலும், வழக்குப்படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல.

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

(ஒம்/-வ.அகவிதன்)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றைவியல்
நீதித்துறை நடுவர் எண்.1, ஒசூர்.